யாழ்ப்பாணத்தின் மூன்று சைவசமயக் கண்கள் எனப் பெருமையுடன் போற்றிக் கூறியுள்ளார்.

இத்தகைய காரைநகர் பெருமகனின் வரலாற்றினை அவரது மாணவராகிய திரு. சி. கணபதிப்பிள்ளை ஐயர் அவர்கள் எழுதினார்கள் இந்நூல் காரைநகர் சைவமகா சபையின் வெளியீடாக 1971இல் வெளியிடப் பெற்றது. இந்நூலின் மறுபதிப்பு காரைநகரைச் சேர்ந்த கனடா சைவசித்தாந்த மன்றத்தின் தலைவர் சிவநெறிச் செல்வர். தி. விசுவலிங்கம் அவர்களின் பெருமுயற்சியில், கனடாவில் 25-07-2015இலும் சுவிஸ்சில் 13-09-2015 இலும், இலண்டனில் 22-11-2015இலும், காரைநகர் நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் 20-12-2015 இலும் சிறப்பாக வெளியிடப் பெற்றது.

கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற உள்ள நூல் அறிமுக விழாவில் சைவத்தமிழ் அன்பர்கள் கலந்து ஒவ்வொருவரும் சிறப்புப் பிரதியைப் பெற்று ஆதரவு நல்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

**அன்பே சிவம்**

**09-01-2016**

**நூல் வெளியீட்டுக் குழுவினர்**
**கொழும்பு.**

**நன்றி!**



உ
சிவமயம்

# "சைவ ஆசிரியர்களைத் தோற்றுவித்த திரு. ச. அருணாசலம்" என்ற நூல்



## அறிமுக விழா

| | | |
|---|---|---|
| இடம் | : | கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபம் |
| காலம் | : | 17-01-2016 ஞாயிற்றுக்கிழமை, மாலை 5.00 மணிக்கு |
| தலைவர் | : | கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள்<br>(பேராசிரியர், திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த பயிற்சி மையம், கொழும்பு) |

## நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| மாலை | 5 : 00 | மங்கல விளக்கேற்றல்<br>திரு. திருமதி குணரத்தினம் தம்பதியினர் |
| | 5 : 05 | பஞ்சபுராணம் ஓதல்<br>திரு. வை. கணேசலிங்கம் (சங்கீத ஆசிரிய ஆலோசகர்) |
| | 5 : 15 | மௌன அஞ்சலி |
| | 5 : 17 | வரவேற்புரை<br>திருமதி. வடிவழகாம்பாள் விசுவலிங்கம்<br>"அன்பு நெறி" திங்கள் இதழ் ஆசிரியர் |
| | 5 : 25 | தலைவர் உரை |
| | 5 : 40 | வாழ்த்துரை<br>உயர்திரு. அ. உமாமகேஸ்வரன் அவர்கள்.<br>(பணிப்பாளர், இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு) |

| | | |
|---|---|---|
| மாலை | 5 : 55 | நூல் அறிமுகவுரை<br>**சிவநெறிச் செல்வர். தி. விசுவலிங்கம்**<br>தலைவர், கனடா சைவசித்தாந்த மன்றம் |
| | 6 : 05 | நூல் ஆய்வுரை<br>**"அருள் மொழி அரசி" வசந்தா வைத்தியநாதன்** |
| | 6 : 20 | நூல் ஆய்வுரை<br>**தமிழருவி த. சிவகுமாரன்**<br>(அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம்) |
| | 6 : 35 | நூல் ஆய்வுரை<br>**திரு. ச. லலீசன்**<br>உபஅதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை |
| | 6 : 50 | நூல் வெளியீடு முதல் பிரதிபெறுவோர்<br>**திரு. S.V. முருகேசு குணரத்தினம்**<br>(தொழிலதிபர்)<br>**கௌரவ திரு. சண்குகவரதன்**<br>(மேல் மாகாணசபை உறுப்பினர்)<br>**திரு. இ. கணேசமூர்த்தி**<br>ஸ்ரீ திருப்பதி பி.வி.ரி லிமிடெட்.<br>**திருமதி. இரத்தினேஸ்வரி திருவாதிரை**<br>ஸ்ரீ திருப்பதி பி.வி.ரி லிமிடெட். |

## சிறப்புப் பிரதிகள் பெறுவோர்

| | | |
|---|---|---|
| மாலை | 7 : 20 | சிறப்புரை<br>**சித்தாந்தரத்தினம் க. பத்மானந்தம்** |
| | 7 : 35 | நன்றியுரை<br>**சைவப்புரவலர் திரு. க. ஜெகதீசன்**<br>(உபதலைவர் கொழும்பு விவேகானந்த சபை, நாவலர் சபை) |
| | 7 : 45 | மங்களம் |

பேரன்புடையீர்,

"சைவ ஆசிரியர்களைத் தோற்றுவித்த திரு. ச. அருணாசலம்" என்ற நூல் அறிமுகவிழா 17-01-2016 ஞாயிற்றுக் கிழமை மாலை 5.00 மணிக்கு, கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற உள்ளது. அன்றைய தினம் மகான். திரு. ச. அருணாசலம் அவர்கள் அமரத்துவம் அடைந்த 96ஆவது நினைவு தினமும் ஆகும்.

தவத்திரு ஆறுமுகநாவலருக்குப் பின் சைவத்தையும் தமிழையும் பாதுகாத்த காரைநகர் திரு. ச. அருணாசலம் உபாத்தியாயர் அவர்கள் நாவலருக்கு அடுத்து வைத்துப் போற்றப்பட வேண்டியவர் என நாவலர் பெருமானின் தமையனார் மகன் திரு. த. கயிலாபிள்ளை அவர்களால் பெருமையுடன் பேசப்பட்டவர். இவர் காரைநகரில் சுப்பிரமணிய வித்தியாசாலை, திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் ஆங்கிலப் பாடசாலை (பின்னாளில் காரைநகர் இந்துக்கல்லூரி, கலாநிதி ஆ. தியாகராசா ம.மா. வித்தியாலயம்) வியாவில் சைவ வித்தியாசாலை போன்ற பாடசாலைகளின் தோற்றத்திற்கும், யாழ்ப்பாணத்தில் உள்ள பல ஊர்களில் சைவப் பாடசாலைகளின் தோற்றத்திற்கும், கோப்பாயில் முதல் சைவ ஆசிரியர் கலாசாலையினது தோற்றத்திற்கும் காரணமானவர்.

இவரின் தூண்டுதலின் பேரிலேயே "இந்துபோட்" இராசரத்தினம் அவர்கள் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை தோற்றுவித்து, நாவலரினதும் அருணாசலம் உபாத்தியாயரினதும் சைவத்தமிழ்க் கல்விப் பணிகளைத் தொடர்ந்தார்.

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தவத்திரு ஆறுமுகநாவலர் (1822-1879), திரு ச. அருணாசலம் (1864-1920) திரு. சு. இராசரத்தினம் (1884-1970) ஆகிய மூவரையும்